# பவுத்தம்: எழுச்சியும் வீழ்ச்சியும் ஒரு வரலாற்றுப் பார்வை



**எழுத்தாளர் மு.சங்கையா**

**கட்டுரைச் சுருக்கம்:**

புத்தரின் புதிய நெறி, பார்ப்பனியக் கொடுமைகளிலிருந்து விடிவு தருவதாகவே பிறந்து, அன்று புத்தொளி வீசிப் பறந்தது. வெறும் தத்துவத் தொகுப்பாக மட்டுமல்லாது மானுடத் தொகுப்பாகவும் விளங்கியது. பிறப்பால் விதிக்கப்படும் உயர்வுதாழ்வுகளைப் பவுத்தம் என்றுமே ஏற்கவில்லை. மவுரியப் பேரரசர் அசோகரின் ஆட்சியில், அரசியலிலும் சமூகத்திலும் செல்வாக்கு பெற்றது பவுத்தம். இதனால் பார்ப்பனியம் செல்வாக்கை இழந்தாலும், முற்றிலுமாக அழியவில்லை.

பவுத்தத்தின் வீழ்ச்சி, புத்தரின் மறைவிலிருந்தே சிறுகச் சிறுகத் தொடங்கி விட்டது. பல உட்பிரிவுகளாகப் பிரிந்து, மனிதரான புத்தரைக் கடவுள் நிலைக்கு உயர்த்திய போது, வீழ்ச்சி இன்னும் வலுப்பெற்றது. மானுடம் என்பதை விலக்கி, வெறும் தத்துவச் சிறைக்குள் தள்ளப்பட்டு, மக்களின் பாளி மொழியிலிருந்து விலகிச் சமஸ்கிருத மொழிக்கு மாறிய போது, பவுத்தத்தின் வீழ்ச்சி கண்ணெதிரே தெரியத் துவங்கிற்று. பார்ப்பனிய ஆதரவாளர்களான குப்தர்களும், பவுத்தத்தை உருவவழிபாடாகக் கருதிய இசுலாமிய அரசர்களும், அதன் வீழ்ச்சியை விரைவுபடுத்தினர். அண்டை நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தாலும், மூட நம்பிக்கைகளிலும் ஜாதிக் கிளைகளிலும் சிக்கி, பல நூறு பிரிவுகளாகப் பிரிந்து, புத்தர் வகுத்த நெறிகளுக்கு நேரெதிர் திசையில் பயணிக்கத் துவங்கி விட்டது பவுத்தம். அது இனியும் புத்தாக்கம் பெறுமா? என்றும் ஆய்கிறது இக் கட்டுரை.

**பவுத்த முன்மையும் பவுத்தப் பிறப்பும்:**

பார்ப்பனியத்தின் வேதமந்திரங்களாலும், சடங்குகளாலும், வேள்விகளாலும், சதுர்வர்ண விதி, கர்ம விதி முறைகளாலும், மதம் சார்ந்த கட்டுக்கதைகளாலும் அழுத்தப்பட்டு, மீண்டெழ முடியாத துயரத்தில் மூழ்கிக் கொண்டிருந்த சாமானிய மக்கள், தங்களை விடுதலை செய்ய ஒரு தேவதூதர் வரமாட்டாரா, வால்நட்சத்திரம் வழிகாட்டாதா, விடிவெள்ளி பூக்காதா என்றெல்லாம் ஏங்கிக் கொண்டிருந்த வேளையில், **“ஒன்றும் தெரியாமல் வளர்ந்து வாழ்ந்து சாகப்போகும் குதிரைக்கு, மோட்சம் தருகின்ற பிராமணர்களே, எல்லாம் அறிந்த பிராமணனாகிய நீங்கள் மோட்சம் பெற வேண்டாமா? அந்த அக்னிகுண்டத்தில் யாகம் நடத்தும் உங்களையும் தூக்கிப் போட்டால் உங்களுக்கும் மோட்சம் கிட்டும் அல்லவா..?”**[1] என்று பார்ப்பனர்களை

நோக்கிய கேள்விகளோடும், பிராமண ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும், வர்ணக் கொடுமைகளையும் சடங்கு முறைகளையும், வேள்வித் தீயில் வெந்து சாகும் விலங்குகளையும் காக்க, புத்த பிரான் ஒரு புதிய நெறியோடும் அறத்தோடும் அவர்கள் முன் வந்தார்.

"உலகம் மாறாத் தன்மை உடையது. ஆன்மா நிலைத்த தன்மை உடையது" என்ற பார்ப்பனியத்தின் அறிவியலற்ற வாதத்தை அடித்து நொறுக்கும் வகையில், இயங்கியல் தத்துவத்தைப் பவுத்தம் முன் வைத்தது. இந்த உலகம் இயங்கிக் கொண்டும், ஒவ்வொரு நொடியும் மாறிக் கொண்டும் இருக்கிறது. இன்று போல் நாளை இருப்பதில்லை. இருப்பவை அனைத்தும் மாறுதலுக்கு உட்பட்டவைகளே. பிறப்பும், இறப்பும் தொடர் நிகழ்வுகள். வாழ்க்கை என்பது நீரோட்டம் போன்றது. வருவதும், போவதும் மெய்ம்மையின் அடிப்படை என்றது. சுருக்கமாகக் கூறவேண்டும் என்றால் **"மாறும் என்ற விதியைத் தவிர மற்ற எல்லாம் மாறும்"** மாற்றம் ஒன்றே மாறாதது என்ற மார்க்சிய விதி, 2500 ஆண்டுகளுக்கு முன்பாகவே உணர்ந்து சொன்ன புத்தரின் தத்துவச் சிந்தனையோடு, மிக நெருக்கமான தொடர்புடையதாக இருந்தது.

சூத்திரனுக்குச் சொர்க்கவாசலின் கதவு ஒரு போதும் திறக்காது என்று முழங்கிக் கொண்டிருந்த பார்ப்பனிய வைதிகப் பிற்போக்குத் தத்துவச் சிந்தனைகளைப் புத்தர் காலத்துக்கு (கி.மு.563-கி.மு.483) முன்பாகவும், அவரது சம காலத்தவரும் கேள்விக்கு உட்படுத்தியே வந்துள்ளனர். மகாவீரரின் காலத்தில் 363 வேத சமய எதிர்ப்பு அமைப்புகளும், புத்தர் காலத்தில் 62 அமைப்புகளும் இருந்ததாகச் சமய இலக்கியங்கள் கூறுகின்றன. பழமையான இந்திய தத்துவத் சிந்தனைகளான வைசேஷிகம், நியாயம், சாங்கியம், யோகம் ஆகியவை பொருள்முதல்வாத நோக்கில் சிந்தித்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. பவுத்த அடிமையாகப் பிறந்து மெய்யியலாளராகப் பரிணமித்த, அறிவுலகில் மிகவும் செல்வாக்குடன் இருந்த, புத்தரின் சம காலத்தவரான, உச்சேதவாத தத்துவப் பிரிவின் தலைமைப் போதகர் **அஜித கேச கம்பளர், "இறப்புக்குப் பின் எதுவுமில்லை. அறக்கொடை, யாகம், ஹோமம் என்றெல்லாம் எதுவுமில்லை. உடல் வேறு; ஆன்மா வேறு அல்ல. மறுபிறப்போ மறுஉலகமோ கிடையாது. உடலின் முடிவே ஆன்மாவின் முடிவு." என்கிற கோட்பாட்டை முன்வைத்ததைப் போலவே, அவரது சீடர்களில் ஒருவரான சார்வாக பயாசி, "மறுமை உலகு சிறந்தது என்றால், மதவாதிகள் ஏன் தற்கொலை செய்து கொள்ளாமல் இருக்கிறார்கள்?"** என்று கேள்வி எழுப்பினார். அதே காலக் கட்டத்தில், நியதிவாத தத்துவப் பிரிவுத் தலைவரான, ஆடையின்றித் திரிந்து கொண்டிருந்தவரான, **மற்கலி கோசாலர் "காலமே மாற்றம் அனைத்தையும் கொண்டு வரும். மனிதன் செய்யக் கூடியது எதுவுமில்லை. காலம் கனியும் பொழுது அனைத்து உயிர்களும் மோட்சத்தை அடையும். எவராலும் துன்பத்தை நீக்கவும் முடியாது. கூட்டவும் குறைக்கவும் இயலாது"** என்றார். அதாவது விதியே வலியது என்கிற தத்தவத்தை முன் வைத்தார்.[2] கோசாலாவின் தத்துவத்தை ஆபத்தானதாகக் கருதிய புத்தரும், மகாவீரரும், அஜிதரின் பகுத்தறிவுக் கோட்பாடுகளினால் பயன் பெற்றதாகக் கூறிக் கொண்டனர். அம்பேத்கர், "அனைத்து தத்துவ வித்தகர்களிலும் கபிலருடைய கோட்பாடுகளே தர்க்கத்தையும் உண்மையையும் அடிப்படையாகக் கொண்டவை" எனப் புத்தர் கருதியதாக குறிப்பிடுகிறார்.[3] அனைத்தையும் பொருள் முதல்வாத அடிப்படையில் விளக்க முயன்ற, இயற்கையை மீறிய சக்திகள் இருக்கின்றன என்பதைச் சார்வாகர்கள்

மறுத்து வந்தனர். மதத்தின் வடிவங்கள் அனைத்தையும் இடித்துரைத்த சார்வாகர்கள், கபிலரின் சாங்கியம், வர்த்தமானரின் சமணம் உள்ளிட்ட தத்துவங்கள், புத்தருக்கு முன்னரே அல்லது சமகாலத்தில் தோன்றியது என்றாலும், அவை பார்ப்பனீயத்தை வெல்ல முடியாமல் போனதற்குக் காரணம் அவற்றுக்கு மாற்றுச் சமூகம் என்கிற கனவைப் பற்றிய முழுமையான பார்வை இல்லாதது தான். அவை துண்டு துண்டாக இருந்தன. அதனாலேயே பார்ப்பனியத்தை எதிர்த்து நிற்க இயலாமல் கால ஓட்டத்தில் கரைந்து போயின.

காரல் மார்க்ஸ், ஹெங்கலின் இயக்கவியலையும், பயர்பக்கின் பொருள் முதல்வாதத்தையும், இணைத்து இயக்கவியல் பொருள்முதல்வாதம் எனும் கருத்தியலை உருவாக்கியதைப் போன்று புத்தர், தனது முன்னோர்களிடமிருந்து சில இழைகளை மட்டும் எடுத்து அரசியல், சமூகம், பொருளாதாரம் என அனைத்து தளங்களிலும் ஒரு புதிய தத்துவத்தை நெய்தார். அது வர்ணத்தையும், வைதிகத்தையும் எதிர்த்து நின்றது. பார்ப்பனர்களின் புனித நூல்களையும் பிரம்மத்தையும் மறுத்தது. சாவை வாழ்க்கையின் முடிவு என்றது. எல்லாவற்றையும் பகுத்தறியச் சொன்னது. யார் எதைச் சொன்னாலும் அது உண்மை தானா, ஏற்புடையதுதானா என்று ஆராயச் சொன்னது. **எந்த மனிதனும், ஒரு தேவனையோ, தேவர்களையோ சாராமல், சுய முயற்சியால் இந்த வாழ்க்கையிலேயே சுவர்க்கத்தை அடையலாம்** என்றது. தன்னுயிர் போல் அனைத்து உயிர்களையும் போற்றுவது, தன்னலம் போலவே பிறர் நலம் பேணுவது, அன்பு, கருணை, பொறுமை, பிறர் நலம் காண்பதில் மகிழ்ச்சி, ஆகிய தர்மங்களைப் போதித்தது. பகுத்தறிவுச் சிந்தனைகளை மக்கள் மனத்தில் விதைக்கும் ஓர் உழவனாகவே பவுத்தம் காட்சி தந்தது. ஆனாலும் எல்லா கேள்விகளுக்கும் என்னிடம் விடை இல்லை என்று புத்தர் கூறிக் கொண்டார்.

### பவுத்தக் கொள்கைகள்:

பவுத்தத்தில் கடவுள் இல்லை. சொர்க்கம் இல்லை. நரகம் இல்லை. மறுபிறப்பு இல்லை. மறுஉலகமும் இல்லை. ஆன்மா இல்லை. சடங்கு இல்லை. உயிர்பலி இல்லை. ஜாதி இல்லை. வர்ணம் இல்லை. ஆண் பெண் பேதமில்லை. அதனாலேயே அது ஒரு மதமாக இல்லை. மதம் என்று சொல்லத்தக்க எதுவும் புத்தரின் பவுத்தத்திடம் தேடித் தேடிப் பார்த்தாலும் தென்படவே இல்லை. பவுத்தத்தில் சமத்துவம் இருந்தது. அன்பு இருந்தது. அறம் இருந்தது. கருணை இருந்தது. கண்ணியம் இருந்தது. எளிமை இருந்தது. நான்கு ஜாதியினரும் தூய்மையானவர்களே என்று மீண்டும் மீண்டும் கூறியது. பவுத்தம் **துன்பத்தைப் பற்றியும், துன்பத்திற்கான காரணம், துன்பத்திலிருந்து விடுதலை, விடுபடுத்தலுக்கான வழியையும் பேசியது.** மக்கள் பின்பற்றத்தக்க எண்வகை நன்மார்க்கமும் (நற்பார்வை, நல்விளைவு, நன்மொழி, நன்னடத்தை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நல்லெண்ணம், நற்பேரானந்தம் கருத்தாகும்). புத்தரின் மறைவுக்குப் பின் கூடிய புத்த பிக்குகள் திரட்டித் தொகுத்த புத்தரின் போதனைகள் அடங்கிய திரிபிடகமும், (மூன்று கூடைகள்), மனித வாழ்வை மேம்படுத்துவதற்கான கோட்பாடுகளும் தத்துவங்களும் அடங்கிய பெட்டகமாகும். அவை பவுத்தத்தின் மணிமுடியில் பதித்த மணிகளாகும்.

பவுத்த அமைப்பிற்குள், பிராமணன்/சூத்திரன், ஆண்டான்/அடிமை, உயர்வு/தாழ்வு என்ற பாகுபாடுகள் இருந்ததில்லை. பவுத்தம் சமத்துவத்தை நடைமுறைப்படுத்தியது. ஜாதித் தடைகளை அகற்றியது. ஒரு முறை பிராமணன் எப்போதும் பிராமணனே; ஒரு முறை சூத்திரன் எப்போதும் சூத்திரனே, என்ற பிராமணச் சதுர்வர்ண விதிகள் புத்தரின்

போதனைகளுக்கு எதிரானதாக இருந்தன. பிறப்பால் யாரையும் பவுத்தம் எடை போடவில்லை. பிறப்பாலும், வம்சத்தாலும் கிடைக்கும் கவுரவத்தைப் பவுத்தம் புறந்தள்ளியது. கடலில் கலக்கும் நதிகள் தம் பெயர்களைத் துறப்பது போல், தங்களது பிறப்பின் தன்மையைத் துறந்துவிட்டு, பவுத்த சங்கத்திற்குள் அவர்கள் சேரட்டும் என்றார் புத்தர். **"பிறப்பினால் ஒருவன் உயர்வடைந்து விட முடியாது. பிறப்பினால் ஒருவன் புனிதம் அடைந்து விட முடியாது. பிறப்பினால் ஒருவன் பிராமணன் ஆகிவிட முடியாது. பிறப்பினால் ஒருவன் பெரியோன் ஆகிவிடவும் முடியாது. ஒழுக்கம் ஒன்றே ஒருவனை உயர்வடையச் செய்கிறது. மாறா ஒழுக்கத்தினாலேயே ஒருவன் உயர்ந்தோன் ஆகிறான்"**[4] என்ற புத்தரின் புரட்சிகரச் சிந்தனைகள், பகுத்தறிவுக் கருத்துகள் அலை அலையாகப் பரவி அனைவரையும் தன்பால் ஈர்த்தது.

பார்ப்பனியக் கொள்கைகளுக்கும் நெறிமுறைகளுக்கும் மாறாக, சுதந்திரம், சகோதரத்துவம் என வரலாற்றில் முதன் முதலாக முழக்கமிட்டு வந்த பவுத்தம், அரசியலிலும், மதத்திலும் படிந்து கிடந்த வேத மரபுக் கறைகளை துடைத்தெறிந்தது. பவுத்தம் வளர வளர, பழைய நம்பிக்கைகளும் மதரீதியான கற்பனைகளும் மறையத் தொடங்கின. **"உண்மை, நன்மை, அழகு ஆகிவற்றின் உயிர்நாடியை புத்தர் தொட்டுக் காட்டியதாக" ராதாகிருஷ்ணன் குறிப்பிடுகிறார்.**[5]

**பவுத்தத்தில் எல்லா ஜாதிகள்:**

ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக வாழ்வில் பெரிய அளவில் மாற்றங்களைக் கொண்டு வந்ததால் சாமான்ய மக்கள், கூண்டிலிருந்து விடுதலை பெற்ற பறவைகள் போல, பவுத்தம் நோக்கிக் கூட்டம் கூட்டமாகப் பறந்து வந்தனர். வேத ஆரியர்களின் வேத விதிகளை உடைத்து சூத்திரர்கள், பெண்கள், உயர்ந்தோர்/ தாழ்ந்தோர், ஆண்டான்/ அடிமை என எல்லோரையும் எந்தப் பாகுபாடும் இல்லாமல் பவுத்தம் ஆரத் தழுவியது. புலையர் சமூகத்தில் பிறந்த சுவபாகனையும், தோட்டி சனிதனையும், நாவிதன் உபாலியையும் தன் சங்கத்தில் இணைத்து, புத்தர் பார்ப்பனியத்துக்கு எதிர் வினையாற்றினார். தாழ்ந்த ஜாதியில் பிறந்த பிராக்ரதி, துப்புரவுப் பணியாளர் சுனிதா, சுடுகாட்டுக் காவலரின் மகள் சோபகா, அடிமையாயிருந்த சுமங்கலா, கணிகையர்களான அம்ரபாலி, விமலா, தொழுநோயாளி சுப்ரபுத்தா, கொள்ளைக்காரன் அங்குலிமாலா, எனக் கடைக்கோடியில் இருந்தவர்களில் பலரையும் பவுத்தம் வரவேற்றது. பின்னாளில் அவர்கள் பெருந்துறவிகளாகத் திகழ்ந்தனர். பிறப்பால் நாவிதனான உபாலி, தலைமைப் பிக்குவாக உயரும் அளவுக்கு சமத்துவம் நிலவியது". சங்கத்தில் சேர்ந்த பிறகு பல பெண்கள் உணர்ந்த விடுதலை அனுபவத்தை இன்று கற்பனை செய்தும் பார்க்க முடியாது"[6]. சமூகத்தின் கடைக்கோடி மனிதர்கள் மட்டுமின்றி, சாரிபுத்தர், மொக்கலனா, கச்சனா போன்ற பிராமணர்கள், ஆனந்தர், ராகுல், அனுராதா போன்ற பெரிய வியாபாரிகள், யாசா போன்ற நகரசபை உறுப்பினர்கள், இளவரசர்கள், பிரபுக்கள், மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஆகியோரும் பவுத்தம் தழுவினார்கள். ஏழைகளை விடப் பணக்காரர்களும், பிரபுக்களும் எண்ணிக்கையில் அதிகம் இருந்தனர். புத்தரது ஆதரவாளர்களில் மகத மன்னன் பிம்பிசாரன், கோசல மன்னன் பசேனாதியும் அடங்குவர்".[7]

பவுத்தத்தைத் தழுவியவர்கள் தங்களை மகராகவோ தீண்டத்தகாதவராகவோ, ஏன் இந்துவாகவோ கூட இல்லை. நான் ஒரு மனிதனாக மாறிவிட்டேன். நான்

கீழ்ஜாதியில் பிறந்தவனோ தாழ்ந்தவனோ அல்ல. பவுத்தத்தைத் தழுவியவுடன் என் தீண்டாமைஅழிந்துவிட்டது. என்கால்களைத் தளையிட்டிருந்த தீண்டாமையின் சங்கிலி இப்போது உடைபட்டு விட்டது. இப்போது எல்லோரையும் போல் நான் ஒரு மனிதன். என்று பூரிப்படைந்தனர். பவுத்த மடங்களில் சேர்ந்த போது அடைந்த எல்லையற்ற பரவசத்தைப் பார்ப்பனர்களும், சத்திரியர்களும் கூட அடைந்திருக்க முடியாது என்று பரவசப்பட்டனர்.[8]

பிராமணச் சதுர் வருண தத்துவத்துக்கு எதிராக பவுத்தமும், சமணமும் நடத்திய 400 ஆண்டுகாலப் போராட்டங்கள், இந்தியச் சமுதாயத்திலும் சமயத்திலும், அரசியலிலும் அழிக்க முடியாத முத்திரைகளைப் பதித்தன. புத்த மதம் இந்திய மக்களின் பெரும்பாலோர் மதமாக மாறியது. அது பார்ப்பனியத்தை எல்லாப் பக்கங்களிலும் தாக்கியதால், பார்ப்பனியம் மக்களிடத்தில் செல்வாக்கு இழந்து வந்தது. பவுத்தம் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை இந்தியச் சமூக வாழ்விலும், பண்பாட்டிலும், அரசியலிலும் கொண்டு வந்தது. சூத்திரர்கள், வைசியர்கள் அரசாண்டார்கள். பசு வதைக்கு எதிராகவும் வர்ணாசிரமத்துக்கு எதிராகவும் நடந்த பவுத்தத்தின் பரப்புரைகள், மக்களைப் பெரிதும் கவர்ந்தன. கல்வி பரவலானது. பொருளாதார நிலையிலும் நடந்த மிகப் பெரிய மாற்றங்கள், விவசாயிகள் மத்தியில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் பெற்றன. அரச சபையிலும், அதிகாரத்திலும், பவுத்தம் வளர வளரப் பார்ப்பனியத்தின் செல்வாக்கு சரிந்தது. ஜாதிய அமைப்பு வலுவிழந்து கொண்டு வந்தது.

கி.மு.268இல் மவுரிய வம்சத்தின் பேரரசனாக **அசோகர் ஆட்சிக்கு** வந்த பின் அதுவரையிலும் சிறப்பு உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவித்து வந்த பார்ப்பனர்கள், அவற்றை இழக்க நேர்ந்தது. பவுத்தம் அரசு மதமாகியது. அதன் பின் இந்திய வரலாறு வேறு திசையில் பயணம் செய்யத் தொடங்கியது. அசோகரின் 41 ஆண்டு கால ஆட்சியில் பவுத்த தர்மத்தை உலகு முழுவதும் தழைக்கச் செய்ய பல நாடுகளுக்கும் தூதர்களை அனுப்பினான். இலங்கைக்கு மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் அனுப்பினான். தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் பவுத்தம் வேரூன்றியது. கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் சோழ நாட்டின் பல பகுதிகளில் பவுத்தம் நிலைபெற்று இருந்ததாக மயிலை சீனி வேங்கடசாமி "பவுத்தமும் தமிழும்" நூலில் அறுதியிட்டுக் கூறுகிறார்.

மவுரியப் பேரரசில் ரத்தம் சிந்தும் யாகங்கள் தடை செய்யப்பட்டன. அசோகர் ஆட்சியிலும் அதற்கு பின்னரும் ஏறக்குறைய 400 ஆண்டுகள் பார்ப்பனர்கள் சமூகத்தில் மதிப்பிழந்து, அதிகாரமிழந்து நின்றார்கள். தங்களது வேத கால மேன்மை படுபாதாளத்தில் கிடப்பதைக் கண்டு கலங்கி நின்றார்கள். ஏமாற்றி, மக்களைச் சுரண்டி வாழ்ந்த வாழ்க்கை முடிவுக்கு வந்ததை உணர்ந்தார்கள். **"அவர்கள், உழவர்களாக, கைவினைஞர்களாக, மந்தை வளர்ப்போராக, கதாகாலட்சேபம் செய்து காலம் கழிப்போராக, வண்டியோட்டுபவர்களாக, ஊர்காவலாளியாக, பால் விற்போராக, முயல் வேட்டை ஆடுபவராக, மீன், ஆமைகளைப் பிடித்து உண்போராக, மண் வெட்டும் வேலை செய்பவராகப் பரட்டைத் தலையோடும், அழுக்கேறிய நிலையிலும் வாழத் தொடங்கினார்கள்"** என்று தாச-பிராமண ஜாதகம் கூறுகிறது.[9] பார்ப்பனர்களின் சமஸ்கிருதம் புழக்கத்தில் இருந்து மறைந்தது. பிக்குகள் மக்கள் மொழியான பாலியில் உரையாற்றினார்கள்.

இவ்வாறு பார்ப்பனியம் உருக்குலைந்து போனாலும், உயிர் வாழ்ந்து கொண்டுதான்

இருந்தது. அவர்கள் அவ்வளவு எளிதில் வீழ்ந்து விடத் தயாராக இல்லை. பவுத்தத்தை வீழ்த்தி, இழந்த சொர்க்கத்தை மீட்க உறுமீனுக்காகக் காத்திருந்தனர். காலம் அவர்களுக்குக் கை கொடுத்தது.

**பவுத்தத்தின் வீழ்ச்சி:**

80 ஆண்டுகள் வாழ்ந்த புத்தர், கி.மு 483 ஆம் ஆண்டில் குசி நகரத்தில் மறைந்த பின், அவரது உடல் எரிக்கப்பட்டு, மிஞ்சிய எலும்பும் சாம்பலும் எட்டுப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, எட்டு ஊர்களில் புதைக்கப்பட்டு, அவற்றின் மேல் சைத்திலாயங்கள் எழுப்பப்பட்டன. புத்தர் மறைந்த சில நாள்களிலேயே இராஜகிருகம் நகருக்கு அருகில், பிக்குகளின் முதல் மாநாடு நடந்தது. அதில் புத்தரின் போதனைகள், பிக்குகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறை போன்றவை தொகுக்கப்பட்டுத் **திரிபிடகமாக** வெளி வந்தது. இரண்டாவது மாநாடு வைசாலியிலும், மூன்றாம் மாநாடு பேரரசர் அசோகர் காலத்திலும், நான்காம் மாநாடு மாமன்னன் கனிஷ்கர் காலத்திலும் நடைபெற்றன. ஒவ்வொரு மாநாட்டிலும் ஏற்பட்ட கருத்து மோதல்களால் பவுத்தம் பிளவுபட்டது. இதில் குறிப்பாக வைசாலியில் நடந்த மாநாடு, பவுத்தத்திற்குள் பல பிரிவுகள் தோன்றக் காரணமாயிற்று.

புத்தர் மறைந்த 100 ஆண்டுகள் கழித்து, பவுத்த சங்கத்தில் புதிதாகத் தோன்றிய பழக்க வழக்கங்களைக் கண்டிக்கும் பொருட்டும், மரபுசார்ந்த பவுத்த நெறிகளைக் காக்கும் பொருட்டும், 700 பிக்குகள் வைசாலியில் கூடி எட்டு மாதங்கள் ஆராய்ந்தனர். வைசாலியில் கூடிய அந்த இரண்டாவது பவுத்தப் பேரவையில் புத்தப் பிக்குகளில் ஒரு பிரிவினர், துறவிகளுக்கான விதி முறைகளைச் சொல்லும் **விநய பிடகத்தில்** பத்து திருத்தங்களைக் கோரினர். ஆனால் அவர்கள் முன்வைத்த சீர்திருத்தங்கள் அனைத்தும் புத்தருக்கும், பவுத்தத்துக்கும் எதிரானவை என்பதால், சபை ஏற்றுக் கொள்ள மறுத்தது. அதனால் 10000 பிக்குகள் தனிப் பிரிவாகப் பிரிந்து போயினர் என்று தீபவம்சம் நூல் கூறுகிறது. பவுத்தம் என்கிற பகுத்தறிவுக் கோட்டையில் விழுந்த முதல் விரிசல் இதுவே.

என்றாலும் அதற்கான கருவைப் பவுத்த சங்கம் தொடக்கத்திலிருந்தே சுமந்து வந்திருக்கிறது என்பதை அதன் தொடர் நடவடிக்கைகள் உணர்த்தின. அதனால்தான் புத்தர் மறைந்த செய்தி கேட்டவுடன் சிலரால் மகிழ முடிந்தது. "புத்தர் இறந்து விட்டதாலேயே யாரும் கவலைப்படாதீர்கள். அவரிடம் இருந்து நாம் விடுதலை அடைந்து விட்டோம். இது சரியான வழி, இது தவறான வழி என்று நமக்குத் தொல்லை கொடுத்தவர் அவர். இப்பொழுது நாம் எதை விரும்புகிறோமோ அதைத் தடையில்லாமல் செய்யலாம். அவர் இறந்தது நன்மையே. அதற்காக ஏன் அழ வேண்டும். ஏன் புலம்ப வேண்டும். அவர் இறந்தது மகிழ்ச்சிக்குரிய செய்தி அல்லவா" என்று சுபக்தர் என்ற துறவி கூச்சலிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததாகத் தோழர் எழில் இளங்கோவன் தனது "பவுத்தம்-ஆரிய திராவிடப் போரின் தொடக்கம்" (பக்-8) என்னும் நூலில் குறிப்பிடுகிறார். பவுத்தத்தின் வீழ்ச்சிக்கான முதல் வித்து இங்கே தான் விதைக்கப்பட்டது.

பின்னர் பவுத்தம் 18 பிரிவுகளாகப் பிரிந்தது. இவை அனைத்தும் மூல பவுத்தத்திலிருந்து விலகி, ஒவ்வொன்றும் தனித்தனி கொள்கைகளையும், நடைமுறைகளையும் கொண்டிருந்தன. இந்த பவுத்த உட்பிரிவுகள் தமக்குள்ளேயே தர்க்கம் செய்து போரிட்டுக் கொண்டன. அவை பவுத்தத்தின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்தன. இந்த 18 பிரிவுகளின் தத்துவக் கருத்துகளை உள்வாங்கிக் கொண்ட நாளாந்தா பல்கலைக்கழகத்தில், மகா புரோகிதராக இருந்த, மாபெரும்

*அறிவினராக அறியப்பட்ட, ஸ்ரீபர்வதம் என்று அழைக்கப்பட்ட, நாகார்ஜுன குண்டாவைப் பிறப்பிடமாகக் கொண்ட* ***நாகார்ஜுனா*** *என்ற ஆந்திரப் பார்ப்பனர்,* ***கி.மு இரண்டாம் நூற்றாண்டில்*** *மகாயானம் என்ற பெயரில் ஒரு பவுத்தப் பிரிவை உருவாக்கினார். பவுத்தம்* ***"ஹீனயானம்," "மகாயானம்"*** *என இரண்டாகப் பிளந்தது. ஹீனயானத்தில் (தேரவாதம்)* ***சவுத்திராந்திகர், வைபாஷிகர்*** *என இரு பிரிவுகள் தோன்றியதைப் போலவே, மகாயானத்திலும்* ***மாத்தியமிகர், யோகாசாரர்*** *என இரு பிரிவுகள் உருவாகின. ஹீனயானம், அதாவது மூல பவுத்தம், மகாயானம் என்னும் புதிய பவுத்தமானது. ஹீனயானம் புத்தரை மனிதராகப் பார்த்தது. மகாயானம் புத்தரைக் கடவுளாக்கியது.*

*புத்தரின் ஆரம்ப காலத்திலிருந்தே, பார்ப்பனர்கள் புத்த மதங்களில் சேர்ந்து வந்தனர். அதன் தொடர்ச்சியாக இந்து மதத்தின் வர்ணமும் ஜாதியும் பவுத்தத்திலும் ஊடுருவியது. மகாயானப் பிரிவைப் பார்ப்பனியக் கோட்பாடுகளுக்கு இணக்கமான மத நிறுவனமாக,* ***நாகார்ஜுனா*** *மாற்றினார். புத்தரின் கொள்கைக்கு எதிரான ஆரியவாதத்தை ஏற்றுக் கொண்டார். நம்மைச் சுற்றி இருப்பவை அனைத்தும் வெறுமை, நாம் காண்பது அனைத்தும் மாயத்தோற்றங்கள் எனக் கூறிய* ***நாகார்ஜுனா,*** *ஒரு வகையான சூனிய வாதத்துக்குள், உபநிடதங்களின் சிந்தனைகளான கருத்து முதல்வாதக் கருத்துக்குள் மூழ்கினார். ஆரியர்களின் மகாயானப் பள்ளி, தன் மொழியை பாளியிலிருந்து சமஸ்கிருதத்துக்கு மாற்றிக் கொண்டது. அசோகர் காலத்திலேயே பவுத்தநெறி நடைமுறைகளில் புகுந்து விட்ட வழிபாட்டுச் சடங்குகள், நாகார்ஜுனா காலத்தில் பெரிதும் அருவருக்கத்தக்க அளவில் வளர்க்கப்பட்டன. மாயாஜாலக் கதைகள் உருவாக்கப்பட்டன. தாந்திரிகவாதம் உயர்த்திப் பிடிக்கப்பட்டது. பவுத்த பிக்குகள் ஆடம்பரமான உடைகளோடும் ஆபரணங்களோடும் பவனி வரத் தொடங்கினர். பிச்சை பெற்ற உணவில், நாள்களைக் கடத்தி வந்த பவுத்த பிக்குகள், இப்போது அறுசுவை உணவை உண்டு மகிழ்ந்தனர். தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருள்கள் நன்கொடையாக வந்து குவிய, துறவிகள் புதிய வாழ்க்கைக்குள் சென்றனர். பவுத்த பிக்குகள் தங்கள் கடமையை மறந்து, பவுத்த விகாரைகளில் இன்பத்தை துய்க்கத் தொடங்கியதால், மக்களிடம் அவர்களுக்கு இருந்த செல்வாக்கு குறைந்தது.*

*புத்தர் கடவுள் ஆனார். புத்தரை வழிபடுவதன் மூலம் மோட்சம் அடையலாம். புத்தரும் காளிதேவியும் ஒன்று தான், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரும் பூஜைக்குரிய தெய்வங்கள் தாம், என்றெல்லாம் பரப்புரை செய்யப்பட்டன. இந்து மதம் விஷ்ணுவின் பத்து அவதாரங்களில், புத்தரை ஒன்பதாவது அவதாரமாக்கியது. புத்தரின் வரலாறு திரிக்கப்பட்டது. புத்தருக்கு முன்னர் 24 புத்தர்கள் பிறந்ததாகவும், புத்தருக்குப் பின்னர் பல புத்தர்கள் பிறந்ததாகவும் இலங்கையின் மகாவம்சம் வரலாறு கதை சொன்னது. பவுத்தர்களுக்குள் ஜாதி வேறுபாடுகளை உருவாக்கியது. உருவ வழிபாடு தொடங்கியது. பார்ப்பனியத்தை உள்வாங்கிக் கொண்டதன் அடையாளமாக அது பரவிய பல நாடுகளிலும், ஜாதியத்தின் விதைகளை ஊன்றிச் சென்றது. அதாவது மகாயான பவுத்தம் "மூட நம்பிக்கைகள் கொண்ட கழிவுப் பொருள்களுக்கு ஒரு வாகனமாக மாறி விட்டது".[10]*

*பவுத்தம் முற்றிலும் அழித்தொழிக்கப்பட்ட வேண்டும். மீண்டும் வேதம் அரியணையில் ஏற வேண்டும் என்கிற சதியின் விளைவால், மவுரிய மரபின் கடைசி மன்னனான* ***பிரகத்ரதனை*** *அவனது போர்ப்படைத் தளபதியாக இருந்த வைதிக வெறி கொண்ட* ***புஷ்யமித்திரன் கி.மு.185இல்***

ஒரு ராணுவ அணிவகுப்பின் போது, அரசனின் தலையைக் கொய்து கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். பவுத்தத்துக்கு எதிர்வினையாக வேத யாகங்களுக்கு உயிர் கொடுத்தான். ராஜசூய யாகத்தையும் நடத்தினான். பவுத்த இலக்கியங்கள் சாம்பலாக்கப்பட்டன. புத்தரின் போதனைகளைச் சுமந்து கொண்டிருந்த 84,000 பவுத்த ஸ்தூபிகளும், பாடலிபுத்திரத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இருந்த பவுத்த மடங்களும், எரித்துச் சாம்பலாக்கப்பட்டன. பவுத்த பிக்குகளும், பெண் துறவிகளும், பவுத்தம் தழுவிய மக்களும் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர். ஒவ்வொரு புத்த துறவியின் தலைக்கும் 100 பொற்காசுகள் விலை வைக்கப்பட்டன. அவனுடைய ஆட்சிக் காலத்தில் தான் மநு ஸ்மிருதி எனும் பார்ப்பனியச் சட்டத் தத்துவ நூல் தொகுக்கப்பட்டதாக அம்பேத்கர் கூறுகிறார். பவுத்தம் வீழ்வதற்கும், வலுவிழந்து கிடந்த பார்ப்பனீயம் மீண்டும் எழுவதற்கும் புஷ்யமித்திரனே காரணமாக இருந்தான் என்பதற்காகவே வைதிக இந்துத்துவவாதிகளால் கொண்டாடப்படுகிறான். வைதிக வெறியும், பவுத்த வெறுப்பும், பார்ப்பனியத்தை மறு நிர்மாணம் செய்வதையும் நோக்கமாகக் கொண்ட சுங்கர்களின் ஆட்சியில், பவுத்தர்களின் நிலை எவ்வாறு இருந்தது என்று வர்ணிப்பதை விடக் கற்பனை செய்து கொள்வது எளிது. இப்போதும் கூட பல பவுத்தர்கள், புஷ்யமித்திரன் பெயரை மிகவும் வெறுப்போடு சாபமிடும் முறையில் தான் உச்சரிக்கிறார்கள்'' என்கிறார் வரலாற்றாசிரியர் எச்.பி.சாஸ்திரி. அப்படி என்றால் அந்தக் கொடுமை எத்தன்மையுடையாக இருந்திருக்கும் என்பதை, கற்பனை செய்து பாருங்கள்.

கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் தொடங்கிய **குப்தர்களின் ஆட்சி (கி.பி 300-கி.பி.600)** பார்ப்பனர்களுக்குப் பொற்காலமாக இருந்தது. பார்ப்பனர்களின் பல வெற்றிக்கும், புத்துயிர்ப்புக்கும் அவர்களது ஆட்சி துணையாக இருந்தது. மவுரியர்களின் காலத்தில் இழந்து போன தங்களது செல்வாக்கைக் குப்தர்கள் காலத்தில் அரசியலிலும் சமூகத்திலும் பண்பாட்டிலும் மீட்டெடுக்கத் தொடங்கினர். பசுவைப் புனிதப்படுத்தும் “கோ பூஜை” இந்தக் காலத்தில் தான் தொடங்கியது. பவுத்தப் புரட்சியால் ஒழிந்து போன தாயத்துகளும், மந்திர முடிச்சுகளும் மீண்டும் மரியாதையைப் பெற்றன. மூடநம்பிக்கைகளான பேயோட்டுதல், ஆவிவிரட்டுதல், மந்திரவேலை, சோதிடம் மற்றும் தெய்வங்கள், புனித இடங்கள் என சகலத்தையும் மீட்டுருவாக்கம் செய்து கொண்டனர். வரலாறுகள் திருத்தப்பட்டன. தமிழின் செவ்வியல் இசையான தமிழிசையையும், தொன்மையான கூத்துக் கலையையும் கைப்பற்றி, அதைத் தங்களுக்கானதாக உரிமை கொண்டாடியதைப் போன்றே, பவுத்த சித்தாந்ததின் வேர் வேதத்தில் உள்ளது என்று சொந்தம் கொண்டாடி வரலாற்றைத் திருத்தி எழுதினார்கள். பவுத்தத்தை அதன் மிக நீர்த்துப் போன வடிவத்தில் பின்பற்றி, புத்தரை ஆலிங்கனம் செய்து கொண்டனர். பவுத்தத்தின் புகழ் பரப்பிய ஸ்தூபிகளையம், புத்தர் சிலைகளையும் இடித்து விட்டுக் கோயில்களைக் கட்டினர். பல சமண, புத்த ஆலயங்கள் இந்துக் கோயில்களாக உருமாற்றம் செய்யப்பட்டன. ஆனாலும் கி.பி ஆறாம் நூற்றாண்டு வரை பவுத்தம் தான் இந்திய நாகரிகத்தை நிர்ணயிப்பதாக இருந்தது என்கிறது வரலாறு.

### 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற வரலாற்றாசிரியரான கல்கணன் தரும் செய்திகள்:

காஷ்மீர் மன்னன் ஜாலுக்கன், பவுத்த மடாலயங்களிலிருந்து எழுப்பப்படும்

சங்கொலி தனது தூக்கத்தைக் கெடுப்பதாகக் கூறி இடித்துத் தள்ளினான். மற்றொரு காஷ்மீர் மன்னனான அபிமன்யு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பவுத்தர்களை இனப்படுகொலை செய்தான். அதே காஷ்மீரில் பவுத்த மதத்தினர் ஒரு பெண்ணைக் கடத்தியதால் நரேன் என்ற கின்னரன் ஆயிரக்கணக்கான பவுத்த மடாலயங்களைத் தீக்கிரையாக்கினான். பேராசிரியர் பி.லட்சுமி நரசு கூறுகிறார்... கனிஷ்கர் மறைந்த 100 ஆண்டுகளுக்குப் பின் சிராவஸ்தி மன்னன் விக்கிரமாதித்தன், பவுத்தர்களை கொடுமைப்படுத்தினான். சிவ பக்தனான மீராகுலன் பவுத்த மதத்தினரை வெட்டி வீழ்த்தினான். வங்காள மன்னன் சசாங்கன் பவுத்தர்களை தனது ஜென்ம எதிரிகளாகக் கருதினான். போதி மரத்தை வேரோடு சாய்ப்பதற்குப் பலமுறை முயன்றான். மன்னன் சுதன்வனன் தனுஷ்கோடி பாலத்திலிருந்து இமாலயம் வரை பவுத்த குழந்தைகள், முதியவர்கள் என்று பாராது அனைவரையும் கொன்றுவிடுமாறு ஆணை பிறப்பித்தான்.[11]

பவுத்தப் புரட்சி, பார்ப்பனர்களின் வேத விதிகளைச் சுக்கு நூறாக்கியதால், எல்லாவற்றையும் இழந்த நிலையில் இருந்த பார்ப்பனர்கள் மீண்டெழுந்து, தங்களது அதிகாரம், ஆளுமை, செல்வாக்கு அனைத்தையும் ஒன்றாகத் திரட்டி, வேத மந்திரங்களின் காலடியில் கிடந்த மன்னர்களின் அருகில் இருந்தபடி, பவுத்தத்தை இந்தியாவில் வேரோடு வெட்டி வீழ்த்தினார்கள் என்கிற வரலாறு ஒருபுறம் இருக்க,

இந்துக்கள், பவுத்தர்கள் மீது நடத்திய கொடூரமான படுகொலைகளை விட, முஸ்லிம் படையெடுப்பாளர்கள் நடத்திய கொடூரமான கொலைகள் அதிகம் என்றும், நாளந்தா, விக்ரமசீல ஜெகத்தலா, ஓதந்தபுரி முதலிய பவுத்தப் பல்கலைக் கழகங்களையும், பவுத்த மடங்களையும் இசுலாமியர்கள் அழித்தொழித்தார்கள் என்றும், அதற்குக் காரணம், புத் என்கிற அரபுச் சொல்லுக்கு உருவச் சிலை என்ற பொருளும் உள்ளதால், பவுத்தம் ஓர் உருவ வழிபாட்டுச் சமயம் என்கிற கருத்து இஸ்லாமியப் படையெடுப்பாளர்கள் நெஞ்சில் குடிகொண்டிருந்ததால், பவுத்தம் அழித்தொழிக்கப்பட்ட வேண்டியதே என்று கருதி, பவுத்தம் பரவிய இடங்களிலெல்லாம் அதை அழித்தொழிப்பதில் இஸ்லாமியர் முன்னின்றனர் என்று அம்பேத்கர், வரலாற்றின் மற்றொரு பக்கத்தைத் திறந்து காட்டுகிறார். பவுத்த சமயக் குருமார்களின் அமைப்பு இஸ்லாமியர்களின் வாளுக்கு இரையானது என்றும், இஸ்லாமியர்களின் வாளுக்கு அஞ்சிய ஆயிரக்கணக்கான பவுத்தர்கள், பவுத்தத் துறவிகள் நேபாளம், (நேபாளத்தில் இரண்டாவது பெரிய மதம் பவுத்தம்) திபேத்து, போன்ற இடங்களுக்குத் தப்பி ஓடிவிட, எஞ்சியவர்கள் இஸ்லாம் சமயத்தைத் தழுவியதாகவும், பவுத்தத்தை ஒழித்ததிலும், இந்தியாவை விட்டு வெளியேற்றியதிலும், இஸ்லாமியப் படையெடுப்பாளர்களுக்குப் பெரும் பங்குண்டு; அதில் எந்த அய்யப்பாடும் இருக்க முடியாது என்று அம்பேத்கர் அழுத்தமாக தனது “பவுத்த சமயத்தின் நலிவும் வீழ்ச்சியும்’ என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

உலகில் மதத்தை மய்யமாக்கி நடந்த யுத்தங்கள் ஏராளம், பிற மதத்தினரை ஈவு இரக்கமின்றிக் கொன்றொழித்த புனிதப் போரின் வரலாறுகளும் கணக்கின்றி கிடக்கின்றன. (கிபி.6 ஆம் நூற்றாண்டில் மதுரையில் 8000 சமணர்களைக் கழுவேற்றிய வரலாறு அனைவரும் அறிந்ததே). ஆனால் பவுத்தத்தை, பவுத்தர்களை இந்தியாவை விட்டுத் துரத்தச் சதிகளும், தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக

நடத்தப்பட்ட கருணையற்ற கொலைகளும் கொடுமைகளும், உலகில் வேறு எந்த மதமும் சந்தித்தது இல்லை.

**பவுத்தப் பிரிவுகள்–ஜாதியம்:**

மகாயான பவுத்தம் இந்தியாவிலும் அண்டை நாடுகளிலும் பரவியது. மகாயான பவுத்தத்தின் நீட்சியாக பிற்காலத்தில் தோன்றிய **வஜ்ராயன பவுத்தம், திபெத்தில்** ஜாதிகளோடு பயணம் செய்கிறது. ஜப்பானில் பின்பற்றப்படும் பிரிவு **ஷிங்கோன் பவுத்தம்**. சீனாவில் ஒரு காலத்தில் பரவலாகத் **தசை பூமிக பிரிவு** இருந்தது. சீனாவில் தாங் அரச மரபு காலத்தில் தோன்றிய **சென் பவுத்தம்**, பின்னர் தெற்கு வியட்நாம், வடகிழக்கு கொரியா கிழக்கு ஜப்பான் வரை பரவியது. **தாய்லாந்து** நாட்டின் அனைத்து பவுத்தப் பிரிவுகளும் ஒரு சில சமூகப் பிரிவு மக்களைக் கீழானவர்களாகவே கருதுகிற போக்கு நிலவுகிறது. **நெவார் பவுத்தம்** பிரிவு வஜ்ராயனத்தை அடிப்படையாகக் கொண்டது.

***1956*இல் அம்பேத்கர்** பவுத்த நெறியைத் தழுவிய போது, ஹீனயானம், மகாயானம், வஜ்ரயானம் போன்ற பிரிவுகளின் கொள்கைகளையும், போதனைகளையும் நிராகரித்து விட்டு, இந்து மதத்தையும், ஜாதியையும் நிராகரிக்கிற **நியோ பவுத்த இயக்கம் / நவயான பவுத்தம் என்கிற புதிய பவுத்தப் பிரிவைத்** தேர்ந்தெடுத்தார். ஒரே நாளில் ஆறு லட்சம் பேர் இந்து மதம் விட்டு வெளியேறி, நவயான பவுத்தத்தில் அய்க்கியமானார்கள். இந்தியாவில் சுமார் 8.4 மில்லியன் பவுத்தர்கள் உள்ளனர். இவர்களில் 87 விழுக்காடு நவயான பவுத்தத்தில் உள்ளனர். அவர்களில் பெரும்பகுதி பட்டியலின மக்களாக இருப்பதாலேயே நவயான பவுத்தத்துக்குத் தலித் முத்திரை குத்தப்படுகிறது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு வரை இலங்கைத் தீவில் இருந்த பழைய **தேரவாத பவுத்தம்,** கி.மு. முதல் நூற்றாண்டில் ஆதி பவுத்தக் கொள்கைக்கு மாறாகப் புதிய பவுத்தத்தை மெல்ல மெல்ல உள்வாங்கிக் கொண்டதால், காலப்போக்கில் ஜாதியும் உள்ளே நுழைந்தது. காரவா, பெரவா, பதகாமா, கொவிகம, போதகரா, மொதலிய, சின்னராயா, மரக்கலகே, ரடேலா, ராஜவகும்புரா, ரொடியா, சாலகம போன்ற 18 ஜாதிகளும், பல உட்பிரிவுகளும் பவுத்தக் கொள்கைக்கு எதிராக, ஏற்றத் தாழ்வுகளோடு இன்னமும் ஜாதிய அடையாளத்தோடு இருக்கின்றன. பவுத்தர்கள் இந்துக்களைப் போலவே ஒரு ஜாதியச் சமூகமாகவே வாழ்கிறார்கள். இலங்கையில் பிரதமராகவும், அதிபர்களாகவும் இருந்தவர்களில் 99 விழுக்காடு **கொவிகம** என்ற ஜாதியைச் சேர்ந்தவர்களே.

இலங்கையின் பவுத்த சங்க அமைப்பு முறையை **நிக்காய** என்று அழைக்கின்றனர். அது மூன்று பிரிவுகளாக ஜாதி ரீதியில் பிரிந்துக் கிடக்கின்றது. அந்தப் பிரிவுக்குள்ளும் ஜாதி உட்பிரிவுகள் இருக்கின்றன. அதை யாழ்ப்பாண இந்து ஜாதிய கட்டமைப்பு முறையோடு ஒப்பிட்டால், வெள்ளாளர், கரையார், தலித் எப்படி இந்தியாவில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக இன்று வரை போராட வேண்டியுள்ளதோ, அது போன்ற நிலை இலங்கை பவுத்தத்திலும் உள்ளது. அங்கே உள்ள உயர் ஜாதியினரான கொவிகம ஜாதி தவிர, பிற ஜாதியினருக்குத் தீட்சை மறுக்கப்படுகிறது. கொவிகம ஜாதி தவிர்த்தவர்கள், பவுத்தத் துறவிகளாக ஆவதற்கு அரசு ஆதரவாகவும் அனுசரணையாகவும் இல்லை. 1803 ஆம் ஆண்டு பவுத்தத் துறவிகளாகக் கொவிகம ஜாதியைச் சேர்ந்தவர்களே இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டது. பிற ஜாதியினருக்குப் பவுத்த துறவிகளுக்கான தீட்சை தர மறுப்பதால், பிற ஜாதியினர் பர்மா, தாய்லாந்து சென்று தீட்சை பெற்று, அந்தச் சமூகத்துக்கான மடங்களில் துறவிகளாக

அமர்கின்றனர். இன்றைக்கும் இலங்கை நாளிதழ்களில் பவுத்தப் பிக்குவாக ஆவதற்கு கொவிகம ஜாதியைச் சேர்ந்தவர்கள் தேவை என விளம்பரங்கள் வருகின்றன.[12] (தமிழர் களம் 12.04.2019.) இங்கே ஜாதிக்கு ஒரு கோயில் கட்டிக் கொள்வதைப் போல, இலங்கையில் ஜாதிக்கொரு பவுத்த விகாரை கட்டிக் கொள்கின்றனர். 1810 வரை, பாணர் துறையிலுள்ள பவுத்த விகாரையில் கொவிகம ஜாதியினர் ஒரு புறமும், ஏனையோருக்கு மறுபுறமும் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதை எதிர்த்துக் கராவ ஜாதியைச் சேர்ந்த 18 பேர் வெளியேறி, சொந்த விகாரை அமைத்துக் கொண்டதாக தமிழர் களம் (12.04.2019) குறிப்பிடுகிறது. இலங்கையில் மட்டுமல்ல, இந்து மதம் தடம் பதித்த இடங்களிலெல்லாம், இந்து மதத்தின் ஆன்மாவான ஜாதியின் நிழல் அதிகமாகவே பதிந்துள்ளது.

இவ்வாறாகப் பவுத்தம் கடந்த 2500 ஆண்டுகளாக உள் முரண்கள், பல பிரிவுகள், சுங்க வம்ச அரசர்கள், குப்தர்கள், வேத நெறிமுறைகள், நாகார்ஜுனர்கள், பார்ப்பனிய அடிவருடி அரசர்கள், இஸ்லாமியப் படை எடுப்பாளர்கள் எனப் பலரும் எய்த ஏவுகணைகளில் சிக்கி, தத்துவ வறட்சியில் சிதறி நலிவுற்று இருந்தாலும், அது இன்னமும் பல நாடுகளில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் அது கவுதம புத்தரின் சமத்துவம், பகுத்தறிவு, வேதமறுப்பு சிந்தனைகளைத் தாங்கிப் பிடித்த பவுத்தமாக இல்லை.

இந்தியாவில் பவுத்தம் மீண்டும் புத்தாக்கம் பெறுமா? தழைத்து வளருமா? என்பது கேள்விக்குறியே. காரணம் பவுத்தப் பிரிவுகளான ஹீனயானம், மஹாயானம், வஜ்ரயானம், நவயானம் எனப் பிரிவுகள் எதுவாக இருந்தாலும், அவை அனைத்தும் வைதிக இந்து மதத்தின் திருதராஷ்டிர ஆலிங்கனத்தில் சிக்கிக் கொண்டுள்ளன. இன்றைக்கும் இந்தியாவில் ஜாதிக் கொடுமைகளிலிருந்து தப்பிக்க, பவுத்த நெறிகளைத் தழுவிக் கொண்டவர்களில் பலரும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களாகவே இருக்கின்றனர். ஆனாலும் அவர்களும் ஜாதி அழுக்குகளைச் சுமந்தபடியே வாழ்கின்றனர். பவுத்தத்துக்கு மாறியதால் ஜாதிய சமூகப் படிநிலைகளில், நடைமுறை வாழ்க்கையில் பெரிய மாற்றம் எதையும் காணவில்லையாததால், அம்பேத்கருக்குப் பின் பவுத்தம் தழுவுதல் என்பது பெரிய அளவில் கவனம் ஈர்க்கும் வகையில் நடைபெறவில்லை.

வைதிக மதத்தின் சாதியத்தால் இழிவுகளையும் அவமானங்களையும், பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் தினம் தினம் சந்தித்தாலும், வேறு பாதை அறியாததால் அதனோடு வாழப் பழகி விட்டனர். சமத்துவம், பகுத்தறிவுகளை நெறிகளாகக் கொண்டுள்ள பவுத்த நெறிகளே உண்மையான விடுதலையைத் தரும் என்கிற கருத்து ஒரு பிரச்சார வடிவமாகக் கூட அவர்களை எட்டவில்லை என்பது வேதனைக்குரியது. பவுத்தத்துக்கு மாறியவர்கள் கூட, பவுத்த நெறிகளுக்கு மாறாக வைதிக மதத்தின் வழிபாட்டுச் சடங்குகளிலும், சாத்திரங்களிலும் இருந்தும் விடுபட முடியாமல் தள்ளாடுவதாகவே செய்திகள் கூறுகின்றன. அம்பேத்கரை ஆசானாகவும், தலைவராகவும், வழிகாட்டியாகவும் கொண்டாடும் தாழ்த்தப்பட்ட மக்களில் பலரும் அம்பேத்கரின் படத்துக்கு அருகில், அவரது கோட்பாட்டுக்கு எதிரான இந்து மதக் கடவுள் படங்களை வைத்து வணங்கும் போக்குகள், நெற்பயிர்களோடு களைகளையும் வளர்ப்பது போன்றதே. இந்தியப் பவுத்தர்கள் இவையெல்லாம் ஆய்வுக்கு உட்படுத்தியாக வேண்டியிருக்கிறது. அதுவும் இந்தியாவின் அரசியல், சமூகம், பண்பாட்டுத் தளங்களில் நிலவுகின்ற

சிறப்பான தன்மைகளை, இந்திய பவுத்தர்கள் முற்போக்குச் சிந்தனையாளர்களுடன் இணைந்து, கூர்மையாக ஆய்வுக்கு உட்படுத்தினாலொழிய, பவுத்தம் வேர்விட வேறு குறுக்கு வழிகள் எதுவும் இல்லை.

**அடிக்குறிப்புகள்:**


1. இந்து மதம் எங்கே போகிறது-அக்னி ஹோத்திரம்ராமானுஜதாத்தாச்சாரியார்-பக்-27
2. இந்திய வரலாற்றில் பகவத் கீதை-பிரேம்நாத் பசாஸ் .பக்150-151
3. புத்தரும் அவரது தம்மமும்-டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்.பக் 93 .
4. பவுத்த அறவியல்-இரா.வீச்சாளன்.பக் 15
5. உலகாயதம்-சட்டோபாத்யாயா -பக் 611.
6. வரலாற்றில் பிராமண நீக்கம்-ப்ரஜ்ரஞ்சன்மணி.பக் 140
7. உலகாயதம் - பண்டைக்கால இந்தியப் பொருள்முதல் வாதம் பற்றிய ஆய்வு.-தேவி பிரசாத் சட்டோபாத்யாயா -பக் 604.
8. வரலாற்றில் பிராமண மதம்-அருணன். பக்1 44
9. இந்திய வரலாற்றில் பகவத் கீதை.-பிரேம்நாத் பசாஸ் பக் 186
10. ஆரிய திராவிடப் போரின் தொடக்கம்-எழில் .இளங்கோ .பக் 6 8
11. இந்திய வரலாற்றில் பகவத் கீதை-பிரேம்நாத் பசாஸ் -பக் 208.
12. தமிழர் களம் 12-04-2019.


**ஆசிரியர் குறிப்பு:**


*மு. சங்கையா, இந்திய அரசின் தொலைத்தொடர்பு நிறுவனத்தில் (BSNL) அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தேசிய தொலைத்தொடர்பு ஊழியர்கள் சம்மேளனத்திலும் (NFTE -BSNL), அனைத்திந்திய தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கத்திலும் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். மனித உரிமை ஆர்வலர்.*

*இவரது முதல் படைப்பான "லண்டன் - ஒரு பழைய சாம்ராஜ்யத்தின் அழகிய தலைநகரம்" என்ற நூலுக்கு, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை, 2013ஆம் ஆண்டின் சிறந்த பயண இலக்கிய நூலுக்கான விருதினை வழங்கியது. உலகமயம் இந்தியாவில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் பற்றிய "பன்னாட்டுச் சந்தையில் பாரத மாதா", இந்திய வலதுசாரிகளைப் பற்றிய "காவி என்பது நிறமல்ல" போன்ற இவரது நூல்கள் பெரிதும் பேசப்பட்டவையாகும். இவரது சொந்த ஊர், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில், துறையூர் என்ற சிற்றூர் (கிராமம்). வசிப்பது தமிழ் வளர்த்த மாமதுரையில்.*


■